# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 22** **தேதி : 09.07.2010**

## மத்திய சங்க செய்திகள்

**தோழர்களே,**

BSNL நிறுவனம் கட்டியுள்ள 3G மற்றும் BWA ஸ்பெக்ட்ரத்திற்கான லைசென்ஸ் கட்டணத்தை திருப்பித் தர வேண்டும் என நாம் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சருக்கு வைத்த வேண்டுகோளின் அடிப்படையில், அவர் பிரதமருக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் கடிதம் எழுதியுள்ளார். தோழர்கள் மாவட்டத்திலிருந்து அனுப்பியுள்ள அஞ்சல் அட்டைகளின் விவரங்களை உடனடியாக மாநில சங்கத்திற்கு அனுப்பவும்.

மேலும் நிலுவைத்தொகையில் மாநிலசங்கத்திற்கான பகுதிப் பணத்தையும், மத்திய சங்க கட்டிட நிதியையும் மாநிலச் சங்கத்திற்கு மாவட்டத்திலிருக்கும் உறுப்பினர் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு உடனடியாக அனுப்பி வைக்கவும். இதில் மாவட்ட செயலர்களும் மாநில சங்க நிர்வாகிகளும் கூடுதல் கவனம் செலுத்தி விரைவில் மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

1. விடுப்புக்கு இணையாக 300 நாட்கள் EL இருப்பவர்களுக்கு முழு பணம் கிடைக்கிறது. 300 நாட்களுக்கு குறைவாக EL வைத்திருப்பவர்களுக்கு குறையும் EL க்கு பதிலாக HPLஐ பணமாக்கிக் கொள்ளலாம் என்ற உத்தரவு 01.07.2010 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இது 01.01.2006 முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு பொருந்தும். இதன் மூலம் ஆயிரக்கணக்கானோர் பயனடைவர்.

2. அலுவலக வளாகத்தில் குடியிருப்பு இருந்தாலோ (அ) ஒரு கிலோமீட்டருக்கு உட்பட்டு குடியிருப்போருக்கு தற்போது போக்குவரத்து படி கொடுக்கப்படுவதில்லை. 6வது சம்பள கமிஷன் பரிந்துரையில் இது விலக்கி கொள்ளப்பட்டு அனைவருக்கும் போக்குவரத்து படி வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. அதை சுட்டி காண்பித்து BSNL-க்கும் இது பொருந்தும் என்றும், எனவே போக்குவரத்து படி அனைவருக்கும் கிடைக்கும் படி உத்தரவிடுமாறு மத்திய சங்கம் நிர்வாகத்திடம் கேட்டது. **அனைவருக்கும் போக்குவரத்து படி வழங்கும் உத்தரவை நிர்வாகம் வெளியிட்டுள்ளது.**

3. டிரெயினிங் செண்டரில் பணிபுரியும் ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட சம்பளத்தில் 7.5 சதம் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. அது தற்போது 11 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

4. மாற்றலில் செல்வோருக்கு வழங்கப்படும் மாற்றல் படி (Transfer Grant) புதிய சம்பள விகிதத்தில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

5. Staff Welfare fund -ல் பண உதவி பெறுவதற்கு இருந்து வந்த அதிக பட்ச அடிப்படை சம்பள நிபந்தனை நீக்கப்பட்டுள்ளாது. முன்னதாக இந்த நிபந்தனை ரூ.15000- ஆக இருந்தது.

6. கிரேடு முறையில் அறிவிக்கப்படும் பரிட்சை முடிவுகளுக்கு Book Award வழங்குவதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

7. ஓய்வு பெறுவோருக்கு செய்யப்படும் செலவுகளுக்காக வழங்கப்படும் தொகை ரூ 3500/- லிருந்து ரூ. 4000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

8. வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுவோருக்கு வழங்கப்படும் நிதி உதவியை ரூ. 3000/- லிருந்து ரூ. 5000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**வாழ்த்துக்களுடன்,**

தோழமையுள்ள

**S.செல்லப்பா**
**மாநில செயலர்**